දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 02
ශ්‍රී ලංකාව
දුරකථන :- 011-2334400/011-2135400
ෆැක්ස් :- 011-2337777

செயலகம்
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு 02
இலங்கை
தொலைபேசி :- 011-2334400/011-2135400
பக்ஸ் :- 011-2337777

Secretariat
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 02
Sri Lanka
Telephone :- 011-2334400/011-2135400
Fax :- 011-2337777
E-Mail : cgir@ird.gov.lk Web: www.ird.gov.lk


***SEC/2023/E/01*** ***29.03.2023***

***தமிழ் மொழிபெயர்ப்பு***

# ஊழிய வருமானத்திலிருந்து முற்பண தனிநபர் வருமான வரியினை *(APIT)* கழிப்பதற்கு தொழில்வழங்குநர்களுக்கான வழிகாட்டி

## *2023/2024* ஆம் வரிமதிப்பீட்டாண்டு முதல்

இந்த வழிகாட்டியானது *2021* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி *(*திருத்தச்*)* சட்டத்தினால், *2022* ஆம் ஆண்டின் *45* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி *(*திருத்தச்*)* சட்டத்தினால் மற்றும் *2022.12.28* ஆம் திகதிய *2312/16* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தலினால் திருத்தப்பட்டவாறான *2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் *83* அ *(1*அ*)* ஆம் பிரிவின் பிரகாரம் ஊழிய வருமானத்திலிருந்தான முற்பண தனிநபர் வருமான வரியினை *(*இதனகத்துப் பின்னர் *"*மு.த.வ.வ.*" -"APIT"* எனக் குறிப்பீடு செய்யப்படும்*)* கழிப்பதற்கு தொழில்வழங்குநர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குகின்றது.

இந்த வழிகாட்டியானது *2023/2024* ஆம் வரி மதிப்பீட்டாண்டு மற்றும் அதன் பின்னரான வரிமதிப்பீட்டாண்டுகளுக்கு ஏற்புடையதாகும்.

## தொழில்வழங்குநர்களினால் மேற்கொள்ளப்படும் கழிப்பனவு

ஒவ்வொரு தொழில்வழங்குநரும், *2023* சனவரி *01* ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில் வரி அட்டவணைகளால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிட்டுள்ளவாறு, வருமான வரியினை செலுத்த பொறுப்புடைய ஒவ்வொரு ஊழியருக்கும் *5* ஆம் பிரிவின் கீழ் ஊழியத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களாக உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் கொடுப்பனவின் போது மு.த.வ.வ. இனை கழிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ஊழிய வருமானத்திலிருந்து பிடித்துவைப்பதற்கான தொழில்வழங்குநரின் கடப்பாடானது, தொழில்வழங்குநர், கொடுப்பனவிலிருந்து வேறு ஏதேனும் தொகையை கழிப்பதற்கும், பிடித்துவைப்பதற்குமான உரிமையொன்றைக் கொண்டிருத்தல் அல்லது அவற்றுக்கான கடப்பாடொன்றின் கீழ் இருத்தல், அல்லது ஊழியத்திலிருந்தான ஊழியரொருவரின் வருமானமானது குறைக்கப்படுதல் அல்லது நடுக்கட்டலுக்கு அமைவானது என வேறு ஏதேனும் சட்டம் ஏற்பாடு செய்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் ஊழிய வருமானத்தில் இருந்து வரியைப் பிடித்துவைப்பதற்கு தொழில்வழங்குநரொருவருக்குள்ள கடப்பாடானது குறைக்கப்படவோ இல்லாதொழிக்கப்படவோ ஆகாது.

## *1.* ஊழியர் மற்றும் ஊழியம்

ஊழியர் என்பது ஊழியத்தில் ஈடுபட்டுள்ள தனியாள் என பொருள்படும். ஊழியம் என்பது, வேறு ஒரு ஆளின் தொழில் தனியாள் ஒருவரின் நிலை; உருவகம் ஒன்றின் முகாமையாளராக தனியாள் ஒருவரின் நிலை;புரியப்பட்ட சேவைகள் தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கத்தக்க ஊதியம் ஒன்றினைப் பெற அவரை உரித்துடையவராக்கும் தனியாள் ஒருவரின் நிலை; தனியாள் ஒருவரினால் வகிக்கப்படும் பகிரங்கப் பதவி; எந்தத் தனியாளுக்கு ஏதேனும் கொடுப்பனவு தொழில் தருநரால் செய்யப்படுகின்றதோ அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ள பெறப்படுகின்ற அல்லது ஊழியர் ஒருவராக அல்லது அதன் ஒத்த தன்மையொன்றில் ஏதேனும் வேறு நன்மையைப் பெறுகின்ற அந்தத் தனியாளின் நிலை; கூட்டுத்தாபனம் அல்லது கம்பெனிப் பணியாளரின் ஒரு நிலை எனப் பொருள்படுவதுடன் இறந்தகால, நிகழ்கால அல்லது எதிர்கால தொழில் ஒன்றையும் உள்ளடக்குகின்றது.

## *2.* வரிக்கு பொறுப்புடைய ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள்

வரி பொறுப்பானது, ஊழியர் ஒருவர் ஆற்றிய சேவைக்கு, கீழே விபரிக்கப்பட்ட ஏதேனும் வடிவில் காசாக அல்லது பொருள்வகையில் பெறப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த ஊதியத்தில் அல்லது எதிர்கால ஊழியத்தில் இருந்து எழும் ஏதேனும் நன்மையின் பெறுமதியில் இருந்து எழுகின்றது.

- சம்பளம், கூலிகள், லீவு கொடுப்பனவு, மேலதிகநேர கொடுப்பனவு, கட்டணங்கள், ஓய்வூதியங்கள், தரகுகள், பணிக்கொடைகள், மிகையூதியங்கள் மற்றும் வேறு ஒத்த கொடுப்பனவுகள்;
- ஏதேனும் வாழ்க்கைச்செலவுப்படி, உணவுப்படி, வாடகை, களியாட்ட அல்லது பயணப்படி உட்பட தனிப்பட்ட படிகள்;
- ஊழியரினால் அல்லது ஊழியரின் இணையான ஒருவரினால் உறப்பட்ட செலவுகளின் கொடுத்துத் தீர்த்தலை அல்லது மீளளிப்பை வழங்குகின்ற கொடுப்பனவுகள்;
- ஊழிய நிபந்தனைகளுக்குத் தனியாளின் உடன்பாட்டுக்கான கொடுப்பனவுகள்;
- தொழில் மிகைக்கான அல்லது ஊழியத்தின் இழப்புக்கான அல்லது முடிவுறுத்துகைக்கான கொடுப்பனவுகள்;
- ஊழியரின் சார்பில் இளைப்பாற்று நிதியமொன்றுக்குச் செய்யப்பட்ட இளைப்பாற்று உதவுதொகைகளும் ஊழியம் தொடர்பில் பெறப்பட்ட இளைப்பாற்றுக் கொடுப்பனவுகளும்;
- ஊழியரின் அல்லது ஊழியருடன் இணைந்த ஆளொருவரின் நன்மைக்காக வேறோரு ஆளுக்கான கொடுப்பனவுகள் அல்லது கைமாற்றங்கள்;
- ஊழியரின் அல்லது ஊழியருடன் இணைந்த ஆளொருவரினால் ஊழியத்தின் பயனைக்கொண்டு பெறப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மைகளின் நியாயமான சந்தைப் பெறுமானம்;
- ஊழியம் தொடர்பில் பெறப்பட்ட நன்கொடைகள் உட்பட வேறு கொடுப்பனவுகள்;

- பங்குகளுக்காக ஊழியரின் உதவுதொகை நீங்கலாக, அப் பங்குகளைக் கொள்வதற்கான விருப்புத் தெரிவொன்றை அல்லது உரிமையைப் பிரயோகித்தலின் விளைவாகப் பங்கீடுசெய்யப்பட்டவையுமான பங்குகள் உட்பட, ஊழியர் பங்குத்திட்டம் ஒன்றின் கீழ் அந்நேரத்தில் பங்கீடுசெய்யப்பட்ட பங்குகளின் சந்தைப் பெறுமதி;

## *3.* ஊழியத்திலிருந்தான விலக்களிக்கப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள்

- விலக்களிக்கப்பட்ட தொகைகளும் இறுதிப் பிடித்துவைத்தற் கொடுப்பனவுகளும்;
- தொழில்வழங்குநரின் சார்பில் தனியாளினால் உறப்பட்ட செலவுகளின் கொடுத்துத் தீர்த்தல் அல்லது மீளளிப்பு;
- சமமான நியதிகளின்மீது எல்லா முழுநேர ஊழியர்களுக்கும் நன்மையானது கிடைக்கக்கூடியதாகவிருக்குமிடத்து, ஆளின் பல்மருத்துவ, மருத்துவ செலவினங்கள் அல்லது சுகாதாரக் காப்புறுதிச் செலவுகளின் கொடுத்துத் தீர்த்தல் அல்லது மீளளிப்பு;
- கொடுப்பனவுகளின் அளவு, வகை அல்லது அடிக்கடியான தன்மை காரணமாக நியாயமற்றவையாகவுள்ளவையும் அல்லது அவற்றுக்குக் கணக்குக் காட்டுதல் அல்லது அவற்றைத் தனியாளுக்கு குறித்தொதுக்குதல் தொழில்வழங்குநருக்கு நிருவாக ரீதியில் செயல்முறைக்கு உகந்ததற்றதாகவுள்ளவையுமான, ஓரங்காட்டப்படாத அடிப்படையில் ஊழியர்களுக்குச் செய்யப்பட்ட அக்கொடுப்பனவுகளையும் அல்லது ஒன்றுதிரளுகின் நன்மைகளும்;
- ஓர் ஊழியர் பங்குத்திட்டத்தின் கீழ் ஊழியரொருவருக்கு அந்நேரத்தில் வழங்கப்பட்ட பங்குகளைக் கொள்வதற்கான உரிமையின் அல்லது விருப்புத்தெரிவின் பெறுமதி;
- ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஓய்வூதியத்தில், சகாய அல்லது சேமிப்பு நிதியத்தில் அல்லது சேமிப்பு சங்கத்தில் ஊழியர் ஒருவரின் கணக்குக்கு தொழில்வதருநரினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகள்;
- ஏற்புடைய ஓய்வூதிய உதவுதொகைகள் வருமான வரித் தேவைப்பாட்டிற்கு ஏற்கனவே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன் முன்னைய வரிமதிப்பாண்டுகளில் அத்தகைய உதவுதொகைகள் மீது ஊழியர் வரி செலுத்தியுள்ளார் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊழியத்திலிருந்து ஓய்வூதியம் பெறும் நேரத்தில் பெறப்பட்ட ஏதேனும் ஓய்வூதிய கொடுப்பனவுகள்.

## *4.* ஊழியத்திலிருந்தான விலக்களிக்கப்பட்ட ஈட்டுகைகளும் இலாபங்களும்

- தனிப்பட்ட ஊறுகள் அல்லது மரணத்தின் போது மூலதன தொகைகளாக செலுத்தப்பட்ட நட்டஈடு அல்லது பணிக்கொடை;
- இலங்கை அரசாங்கம் அல்லது அரசாங்க திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஓய்வூதியம்;
- உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதியம் அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட சகாய நிதியத்திலிருந்து ஓய்வுபெறுகைக்கு செலுத்தப்பட்ட தொகைகள்;

- *1987,* ஏப்பிரல் *01* அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்ட எந்தவொரு காலப்பகுதிக்கும் ஈட்டிய முதலீட்டு வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, ஓய்வூதிய நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து ஓய்வுபெறுகையின் மீது செலுத்தப்பட்ட தொகைகள்;
- இராஜதந்திர விடுபாட்டுரிமை சட்டம் மற்றும் ஏனைய குறிப்பிடப்பட்ட சமவாயங்**களின் கீழ் சிறப்புரிமைகளுக்கு உரித்துடைய தனியாளினால் பெறப்பட்ட வருமானம்**;
- அரசாங்க அலுவலர் ஒருவருக்கு வழங்கப்பட்ட வீதிவாகன அனுமதிப்பத்திரத்தில் இருந்து அவ்வூழியரினால் பெறப்பட்ட அல்லது அவருக்கு வழிவந்த நன்மைகள்.

## *5.* ஊழிய வருமானத்திலிருந்தான நிவாரணங்கள்

ஊழிய வருமானத்திலிருந்தான வரியிடற்பாலதான வருமானத்தை அடைவதற்கு, *2023/2024* ஆம் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து வதிவுள்ள தனியாட்கள் மற்றும் பிரசைகளான வதிவற்ற தனியாட்களுக்கு ரூபா *1,200,000* நிவாரணமாக காணப்படுகினறது.

அதற்கமைவாக, வரிமதிப்பீட்டான்றுக்கு ரூபா 1,200,000.00 அல்லது மாதமொன்றுக்கு ரூபா 100,000.00 இனை விஞ்சும் ஊதியத்தைப் பெறும் எவரேனும் வதிவுள்ள (பிரசை அல்லது பிரசையற்ற) தனியாள் அல்லது வதிவற்ற ஆனால் பிரசையாகவுள்ள தனியாள், ஊழியத்திலிருந்தான வருமானத்தில் இருந்து மு.த.வ.வ. இற்கு பொறுப்புடையவராவார். வதிவற்ற மற்றும் பிரசையற்ற ஊழியர்களுக்கு ரூபா *1,200,000* நிவாரணம் ஏற்புடையதாகமாட்டாது.

## *6.* ஊழிய வருமானத்தில் இருந்து வரி கழிப்பதற்கான வரி அட்டவணைகள்

2023/2024 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு (2023 ஏப்பிரல் 01 முதல் செயல்வலுப்பெறும்) மற்றும் அதற்கு பின்னரும் புதிய வரி அட்டவணைகள் ஏற்புடையதாகும். ஊதியத்திலிருந்தான மு.த.வ.வ கழிப்பனவானது, ஏற்புடைய வரி அட்டவணையை பிரயோகித்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

## *7.* வரி அட்டவணைகளை பிரயோகிக்கும் வகை

தொழில்வழங்குநர் ஒருவர், ஊழியர் ஒருவரது ஊழியம் தொடர்பில், வரிமதிப்பீட்டாண்டில் அவ் ஊழியருக்கு கொடுப்பனவு ஒன்றை மேற்கொள்ளும்போது, அத் தொழில்வழங்குநர், கீழ்வருவனவற்றுக்கு அமைவாக அத்தகைய கெடுப்பனவிலிருந்து கட்டாயமாக தொகை ஒன்றை பிடித்துவைத்தல் வேண்டும். –

*(அ)* கொடுப்பனவானது, அவர்களது தொழில்வழங்குநர்களுக்கு **முதன்மை ஊழியத்திற்கான வெளிப்படுத்துகை ஒன்றை சமர்ப்பித்திருக்கும் அனைத்து வதிவுள்ள மற்றும் வதிவற்ற ஆனால் பிரசையாகவுள்ள ஊழியர் மற்றும் ஒரு ஊழியத்தை மட்டும் கொண்டுள்ள வதிவுள்ள மற்றும் வதிவற்ற ஆனால் பிரசையாகவுள்ள ஊழியரது** ஊழியத்திலிருந்தான கிரமமான இலாபங்களைக் கொண்டிருப்பின், **வரி அட்டவணை *01* இனைப் பிரயோகித்தல் வேண்டும்.**

(ஆ) கொடுப்பனவானது, **முதன்மை ஊழியத்திற்கான வெளிப்படுத்துகை ஒன்றை சமர்ப்பித்திருக்கும் அனைத்து வதிவுள்ள மற்றும் வதிவற்ற ஆனால் பிரசையாகவுள்ள ஊழியர் மற்றும் ஒரு ஊழியத்தை மட்டும் கொண்டுள்ள வதிவுள்ள மற்றும் வதிவற்ற ஆனால் பிரசையாகவுள்ள ஊழியரது** மொத்த-தொகை கொடுப்பனவு ஒன்றை கொண்டிருப்பின் **வரி அட்டவணை *02* பிரயோகித்தல் வேண்டும்.**

(இ) கொடுப்பனவானது, அனைத்து ஊழியர்களதும் ஒரு தரத்திலான கொடுப்பனவைக் கொண்டிருப்பின், **வரி அட்டவணை *03* பிரயோகித்தல் வேண்டும்.**

(ஈ) **இலங்கை பிரசையாக அல்லாத வதிவற்ற ஊழியர்களினால்** பெறப்பட்ட கொடுப்பனவிற்கு **வரி அட்டவணை *04* பிரயோகித்தல் வேண்டும்.**

(உ) **ஊழியர் ஒருவரது முதன்மை ஊழியத்திலிருந்தான** மாதாந்த கிரமமான இலாபம் ரூபா *100,000.00* இனை விட குறைவாகவும் ஆனால் குறிப்பிட்ட மாதங்களில் உயர் ஊதிய கொடுப்பனவு காரணமாக வரிமதிப்பீட்டாண்டின் ஏதேனும் மாதம் வரையில் திரட்டிய இலபாமானது ரூபா *1,200,000.00* இனை விஞ்சின், அச் சந்தர்ப்பங்களில் **வரி அட்டவணை *05* பிரயோகித்தல் வேண்டும்.**

(ஊ) கொடுப்பனவானது, **தொழில்வழங்குநர் ஒருவரினால் ஊழியரது ஊழியத்திலிருந்தான அவரது வருமானத்தின் வரி பொறுப்பின் கொடுப்பனவை அல்லது மீளளிப்பைக் கொண்டிருப்பின், வரி அட்டவணை *06* பிரயோகித்தல் வேண்டும்.**

(எ) **கொடுப்பனவானது, முதன்மை ஊழியத்திற்கான வெளிப்படுத்துகையை சமர்ப்பிக்காத** அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியத்தைக் கொண்டுள்ள எவரேனும் ஊழியரது ஊதியத்தைக் கொண்டிருப்பின், **வரி அட்டவணை *07* பிரயோகித்தல் வேண்டும்**.

வரி அட்டவணைகள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதளமாகிய *www.ird.gov.lk* இல் காணப்படுகின்றது.

## *8.* முதன்மை ஊழியம்

- ஒரு வரி மதிப்பீட்டாண்டிற்கு, ஊழியர் ஒருவரது முதன்மை ஊழியம் என்பது, அவ் வருடத்திற்கு ஊழியர் ஒருவர் அவரது ஊழியம் தொடர்பில் தொழில்வழங்குநருக்கு வெளிப்படுத்துகை ஒன்றை சமர்ப்பித்துள்ள ஊழியமாகும்.
- ஒரு ஊழியத்தை மட்டும் கொண்டுள்ள ஊழியர் தவிர்ந்த ஊழியர் ஒருவர், அவரது ஊழியத்திலிருந்தான மாதாந்த கிரமமான இலாபங்கள், மாதம் ஒன்றுக்கு ரூபா *100,000.00* அல்லது வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு ரூபா *1,200,000.00* இனை விஞ்சுகின்ற அல்லது விஞ்சும் எனக் கருதின், அத்தகைய ஊழியத்தை அவ் ஊழியர் தமது முதன்மை ஊழியமாக பிரேரித்து வெளிப்படுத்தல் ஒன்றினை தொழில்வழங்குநருக்கு வழங்குதல் வேண்டும்.
- வெளிப்படுத்துகையானது ஊழியர் மற்றும் தொழில்வழங்குநரினால் ஒப்பமிடப்பட்டு திகதியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரிமதிப்பீட்டாண்டிற்கு தொடர்புபடுத்தலாம்.
- ஊழியர் ஒருவர் எச் சந்தர்ப்பத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட முதன்மை ஊழியத்தைக் கொண்டிருத்தல் ஆகாது
- ஊழியர் ஒருவர் அவரது முதன்மை ஊழியம் முடிவுறுத்தப்படின், அவ் வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் மட்டுமே அத்தகைய வெளிப்படுத்துகையை மீளப்பெறலாம்.

***குறிப்பு: - உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் www.ird.gov.lk வலைதளத்தில் காணப்படும் முதன்மை ஊழிய வெளிப்படுத்துகைப் படிவத்தைப் பயன்படுத்தவும்.***

## *9.* இரண்டாம் ஊழியம்

ஓர் ஊழியர் தொடர்பில், இரண்டாம் ஊழியம் என்பது, அவ் ஊழியரது முதன்மை ஊழியம் தவிர்ந்த எந்தவொரு ஊழியம் எனப் பொருள்படும்.

## *10.* கழிக்கப்பட்ட வரியின் அனுப்புகை

i. குறிப்பிட்ட மாதத்தின் போது ஒவ்வொரு ஊழியரினதும் ஊழிய வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட வரியானது, அதனை அடுத்து தொடர்ந்து வரும் மாதத்தின் *15* ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

ii. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அனுப்புகை படிவங்களைப் பயன்படுத்தி **இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும்** கொடுப்பனவினை மேற்கொள்ளலாம்.

iii. தொழில்வழங்குநர்கள் அனுப்புகை படிவத்தின் பின்பகுதியில் காணப்படும் அறிவுறுத்தல்களை வாசிக்க தேவைப்படுத்தப்படுகின்றனர்.

iv. தொழில்வழங்குநர்கள், கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர் அனுப்புகை படிவத்தின் மூன்றாம் பிரதியை வைத்திருத்தல் வேண்டும்.

## *11.* ஊழியர்களினால் விபரத்திரட்டினை சமர்ப்பித்தல்

ஊழிய வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட வரியானது, இலங்கையின் பிரசையல்லாத, வதிவற்ற ஊழியர் ஒருவருக்கான இறுதி பிடித்துவைத்தல் கொடுப்பனவாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். ஏனைய ஊழியர்கள் *2023/2024* மற்றும் தொடர்ந்து வரும் வரி மதிப்பீட்டாண்டிற்குரிய வருமான விபரத்திரட்டினை கீழ்வரும் சந்தர்ப்பங்களில் கோப்பிட தேவைப்படுத்தப்படுகின்றனர்;

அ. ஊழியர் ஒருவருக்கு, ஊழிய வருமானத்துடன் ஏனைய மூலங்களிலிருந்தான வருமானமும் காணப்படின், அத்தகைய ஊழியர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பதிவு செய்துகொள்வதன் மூலம் தனியாக வருமான விபரத்திரட்டினை கோப்பிட தேவைப்படுத்தப்படுகின்றார்.

ஆ. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் வருமான விபரத்திரட்டு ஒன்றினை கோப்பிட தேவைப்படுத்தி, ஊழியர் ஒருவருக்கு எழுத்துமூல அறிவித்தலை அனுப்பி இருப்பின், அவரது வருமான மூலம் ஊழியமாக மட்டும் இருந்த போதிலும், அத்தகைய ஊழியர் வருமான விபரத்திரட்டினை கோப்பிட தேவைப்படுத்தப்படுகின்றார்.

ஊழியர் ஒருவரது வருமானம் மூலம் ஊழியத்திலிருந்து மாத்திரமே காணப்படின், அத்தகைய ஊழியர் வருமான விபரத்திரட்டினை சமர்ப்பிக்க தேவையில்லை.

## *12.* ஊழிய வருமானத்திலிருந்து வரியை கழிப்பது தொடர்பில் மேலதிக அறிவுறுத்தல்களும் தகவல்களும்

இந்த அறிவுறுத்தல்கள், ஊழியர்களிடமிருந்து வரித் தொகையை கழிப்பதற்கான தொழில்வழங்குநர்களுக்கான வழிகாட்டியாகும். எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாட்டிற்கும் இந்த அறிவுறுத்தல்களுக்குமிடையில் வேறுபாடுகள் ஏதும் இருப்பின், சட்டத்தின் ஏற்பாடுகளே பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக விவரங்கள், வரி அட்டவணைகள் மற்றும் ஏற்புடைய படிவங்கள் மற்றும் அட்டவணைகளின் இலத்திரனியல் வடிவங்கள், ஏற்புடைய வர்த்தமான அறிவித்தல்கள் என்பவற்றினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ***www.ird.gov.lk*** என்ற உத்தியோகபூர்வ வலை தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலதிக தெளிவுபடுத்துகைகளுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்*;*

உ.நா.இ. அழைப்பு மையம் *– 1944*
வியாபார ஆலோசனை அலகு *- 011 2134258/ 2134268/ 2134269/ 2134204*
செயலகம் *– 011 2135432/ 2135438/ 2135433/ 2135435/ 2135412/ 2135410/ 2135406*
உ.போ.செ.வ. - *PAYE* கணக்காய்வு அலகு *(*நவம் மாவத்தை*) – 011 2302246/ 2302859/ 2302964/ 2302862*

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**